



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 156 01.12.2025 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 156 Monday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

திங்கட்கிழமை
(01-12-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-15
பிறை: வளர்பிறை
திதி
ஏகாதசி பிற்பகல் 2.36 வரை
பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
ரேவதி இரவு 7.52 வரை
பிறகு அசுவினி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி வரை
எமகண்டம்
காலை 10.30- 12.00 மணி.
சூலம் -கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-7 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | பரிசு |
| ரிஷபம் | தனம் |
| மிதுனம் | மேன்மை |
| கடகம் | நற்செயல் |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | உழைப்பு |
| துலாம் | உயர்வு |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | பெருமை |
| மகரம் | நன்மை |
| கும்பம் | வாழ்வு |
| மீனம் | கடமை |

# மன் கி பாத் நிகழ்ச்சியில் தமிழ் மொழியில் பேசிய பிரதமர் மோடி!



**புதுடெல்லி,டிச.01:**

பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் (மன் கி பாத்) நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுக்கு வானொலியில் உரையாற்றி வருகிறார்.

தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றியதாவது:-

இந்தியாவின் 2 மிகப் பழமையான நகரங்களின் சங்கமம் எப்போதும் சிறப்பு வாய்ந்தது. நான் காசி தமிழ் சங்கமம் பற்றிப் பேசுகிறேன். 4-வது காசி தமிழ் சங்கமம் வருகிற 2-ந் தேதி வாரணாசியில் தொடங்குகிறது. இந்த ஆண்டு கருப்பொருள் மிகவும் சுவாரசியமானது. அது தமிழ் கற்க என்பதாகும்.

காசி தமிழ் சங்கமம் தமிழ் மொழியை நேசிக்கும் அனைவருக்கும் ஒரு முக்கியமான தளமாக மாறியுள்ளது. தமிழ் கலாச்சாரம் சிறந்தது. தமிழ் மொழி சிறந்தது. தமிழ் பாரதத்தின் பெருமை.

விவசாயத்துறையில் இந்தியா மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. 357 மில்லியன் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து இந்தியா வரலாற்று சாதனை படைத்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 100 மில்லியன் டன் அதிகரித்து உள்ளது.

இளைஞர்களின் அர்ப்பணிப்பையும், விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பு உணர்வையும் பார்க்கும் ஒவ்வொரு முறையும் எனது இதயம் உற்சாகத்தால் நிரம்பி வழிகிறது. இளைஞர்களின் இந்த அர்ப்பணிப்பு வளர்ச்சி இந்தியாவின் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும்

வந்தே மாதரம் 150-வது ஆண்டு விழா, மத்திய மண்டபத்தில் அரசியலமைப்பு தின கொண்டாட் டம் மற்றும் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலில் உள்ள கோபுரத்தில் காவிக்கொடி ஏற்றப்பட்டது ஆகியவை இந்த மாதத்தில் நடந்த உத்வேககரமான முன்னேற்றங்களில் அடங்கும்

இவ்வாறு மோடி பேசியுள்ளார்.

நாடு முழுவதும் தேனீ வளர்ப்பு முயற்சிகள், விளையாட்டுத் துறையில் சாதனைகள், 2030-ல் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்தை இந்தியா வென்றது. ஜி20 உச்சி மாநாடு குறித்தும் பிரதமர் விரிவாகப் பேசினார்.

டெல்லியில்

# 4 மாடி கட்டிடத்தில் தீவிபத்து 4 பேர் உயிரிழப்பு



**புதுடெல்லி, டிச.01:**

தலைநகர் டெல்லியில் நடந்த தீவிபத்தில் ஒரு சகோதரி மற்றும் சகோதரர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

தெற்கு டெல்லியில் உள்ள டைக்ரி பகுதியில் நேற்று மாலை நான்கு மாடி கட்டிடத்தின் தரை தளத்தில் உள்ள ஒரு ஷூ கடையில் தீ விபத்து ஏற்பட்டது. தீ கட்டிடத்தின் மேல் தளம் வரை பரவி கடும் பாதிப்பு ஏற்பட்டது.

விபத்தில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலத்த காயமடைந்த இரண்டு பெண்களை போலீசார் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர், அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒருவர் உயிரிழந்தார்.


இறந்தவர்கள் கட்டிடத்தின் உரிமையாளர் சதேந்தர் என்ற ஜிம்மி (38) மற்றும் அவரது சகோதரி அனிதா (40) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்ற இருவரின் விவரங்கள் இன்னும் தெரியவில்லை.

காயமடைந்த பெண் மம்தா (40) 25 சதவீத தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்தில் வழக்குப் பதிவு செய்த போலீசார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

தீவிபத்துக்கான காரணத்தைக் கண்டறிய குற்றவியல் மற்றும் தடயவியல் குழுக்கள் சம்பவ இடத்திற்கு வந்து ஆதாரங்களைச் சேகரித்து வருகின்றன.

# பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்றம் இன்று கூடுகிறது



**புதுடெல்லி, டிச.01:**

பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடா் இன்று (1-ந்தேதி) தொடங்குகிறது. வருகிற 19-ந் தேதி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது. விடுமுறை நாட்கள் நீங்கலாக 15 அமாவுகள் இந்த கூட்டத்தொடரில் இடம்பெற உள்ளன.

12 மாநிலங்களில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.), டெல்லி குண்டு வெடிப்பு, வாக்கு திருட்டு, டெல்லி காற்று மாசு, வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட பல் வேறு பிரச்சனைகள் குறித்து அவையில் விவாதிக்க காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு விவாதிக்க மறுக்கும் என்பதால் இரு அவைகளிலும் கடும் அமளி ஏற்படும்.

தி.மு.க, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகள் வாக்காளர் தீவிர திருத்தம் தொடர்பான பிரச்சனையை கிளப்புவார்கள்.

கடந்த ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை நடைபெற்ற மழைக்கால கூட்டத் தொட ரில் பீகாா் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களுக்கான விவாதம் குறித்த எதிர்க்கட்சிகளின் அமளியால் பாதிக்கப்பட்டது. மழைக்கால கூட்டத்தொட ரில் மக்களவையின் செயல்பாடு 31 சதவீதமாகவும், மேல்-சபையின் செயல்பாடு 39 சதவீதமாகவும் இருந்தது.

குளிர்கால கூட்டத்தொடரில் சிவில் அணுசக்தி துறையில் தனியாருக்கு அனுமதி வழங்குவது, இந்திய உயா் கல்வி ஆணையம் அமைப் பது, பெருநிறுவன சட்டம் மற்றும் பங்குச்சந்தை உள்ளிட்ட 10 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

10 மசோதாக்களில் 4 நிதித்துறை தொடர்புடையவை, 2 சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்புடையவை. கல்வி, எரிசக்தி, போக்குவரத்து துறை, உள்துறை ஆகியவை தொடர்பான தலா ஒரு மசோதாவும் அடங்கும்.

வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு கொண்டாடப்படுவதால் அதன் வரலாறு குறித்த விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாடலில் இருந்து முக்கிய வரிகள் கடந்த 1937-ம் ஆண்டு நீக்கப்பட்டதே இந்தியாவின் பிரிவினைக்கு காரணம் என்று பிரதமர் மோடி குற்றம்சாட்டி இருந்தார். வந்தே மாதரம் பாடலின் வரலாறு, சுதந்திர இயக்கத்தில் அதன் பங்கு குறித்து இளைஞர்களுக்கு நினைவூட்டுவதற்காக விவாதம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.பாராளுமன்ற கூட்டத்தில் எந்த பிரச்சனை குறித்தும் விவாதிக்க தயார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஒருமித்த கருத்துடன் அவையை சுமூகமாக நடத்துவதற்கு வேண்டுகோள் விடுக்க அனைத்து கட்சி கூட்டத்தை பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு இன்று கூட்டியுள்ளார்.

# ஒடிசாவில் அரசியலமைப்பின் மீது உறுதிமொழி எடுத்து திருமணம் செய்த தம்பதி



**ஒடிசா, டிச.01:**

ஒடிசாவின் பெர்ஹாம்பூரைச் சேர்த்தவர் ப்ரீத்திபன்னா மிஸ்ரா (40). இவர் தெலுங்கானாவில் ஐதராபாத்தில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். ஆந்திராவின் காக்கிநாடாவை சேர்ந்த பானு தேஜா (43) பெங்களூரில் பணியாற்றி வருகிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இருவரும் ஐதராபாத்தில் ஒரு நிகழ்வில் சந்தித்து காதலித்த நிலையில் நேற்று முன் தினம் அவர்கள் திருமணம் பெர்ஹாம்பூரில் நடைபெற்றது.

பாரம்பரிய சடங்குகள் இன்றி நடந்த இந்த திருமணத்தில் இருவரும் அரசியலமைப்பு மீது உறுதிமொழி எடுத்து திருமணம் செய்து கொண்டனர்.

இதன்பின் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ரத்த தான முகாமில் ரத்த தானம் செய்தனர். திருமணத்துக்கு வனத்திருந்த உறவினர்களும் ரத்த தானம் செய்தனர். இதன்மூலம் மொத்தம் 18 யூனிட்கள் ரத்தம் சேகரிக்கப்பட்டன.

ஒடிசாவில் அரசியலமைப்பின் மீது உறுதிமொழி எடுத்து தம்பதியினர் திருமணம் செய்துகொண்ட நிகழ்வு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு 4 பேர் உயிரிழப்பு

**கலிபோர்னியா, டிச.01:**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ஸ்டாக்டனில் உள்ள விருந்து மண்டபத்தில் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர். அப்போது அங்கு துப்பாக்கி சூடு நடந்தது. இதனால் விருந்தில் பங்கேற்றவர்கள் அதிர்ச்சி அடைந்து தலைதெறிக்க ஓடினர்.

இந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலியானார்கள். 10 பேர் காயம் அடைந்தனர். சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். துப்பாக்கி சூடு நடத்தியவர் யார்? என்ன காரணம்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இங்கிலாந்தில் படித்து வந்த

# இந்திய இளைஞரை கத்தியால் குத்திக் கொலை செய்த கும்பல்



**இங்கிலாந்து, டிச.01:**

இங்கிலாந்தில் உயர்கல்வி பயின்று வந்த அரியானவை சேர்ந்த இளைஞர் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

அரியானவை சேர்ந்த விஜய் குமார் ஷியோரன் (30) மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தில் பணிபுரிந்த நிலையில் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு இந்த ஆண்டு தொடக்கத்தில் உயர்கல்விக்காக இங்கிலாந்து சென்றார்.

இந்த சூழலில், இந்த மாதம் 25 ஆம் தேதி வெர்ஸ்டரில் அடையாளம் தெரியாத நபர்களால் விஜய் கத்தியால் தாக்கப்பட்டார். விஜய் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பெற்று வந்த நிலையில் விஜய் உயிரிழந்தார்.

விஜய்யின் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் அளித்த இங்கிலாந்து காவல்துறையினர், சந்தேகத்தின் பேரில் 5 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

விஜய்யின் உடலை விரைவில் இந்தியாவிற்கு கொண்டு வர உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் வெளியுறவு அமைச்சகத்திடமும், அரியானா முதல்வர் நயாப் சிங் சைனியிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# டிட்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது




**சென்னை, டிச.01:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர். இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, இன்று காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4) தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| Public Notice | Loss of Share |
| Legal Notice | Merger |
| Tender Notice | Acquisition |
| Society Notice | AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009 Email: anandabhaskarnews@gmail.com




## இளையான்குடி பேரூராட்சியில் தேர்வு செய்யப்பட்ட நியமன உறுப்பினர்க்கு பாராட்டு





**சிவகங்கை, டிச.01:**
சிவகங்கை மாவட்டம் தமிழக அரசு உத்தரவின் பேரில் இளையான்குடி பேரூராட்சி மன்ற நியமன உறுப்பினராக மாற்றுத்திறனாளி முகமது இக்பால் நியமன உறுப்பினராக தேர்ந்தெடுத்த தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் பேரூராட்சி நிர்வாகம் ஆகியோர்க்கு இளையான்குடி சமூக அலுவலர் அப்துல் மாலிக் நன்றி தெரிவித்து புதிதாக பொறுப்பேற்றுள்ள நியமன உறுப்பினருக்கு மரியாதை செலுத்து விதமாக சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலப்பள்ளி வாசல் டிரஸ்ட் காதர் மீரா பொருளாளர் நாசர் நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் ரகுப் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## இரு நூல்கள் வெளியீடு




**திருச்சி, டிச.01:**
கவிஞர், எழுத்தாளர், திரைப்பட வசனகர்த்தா இயக்குநர் கண்மணி ராஜா எழுதிய 1. பாதாளக் கரண்டி சிறுகதை தொகுப்பு 2. மனசுக்குள் ஒளித்து வைத்த மயிலிறகு ( ஹைக்கூ தொகுப்பு) நூல்கள் வெளியீடு விழா திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க குளிர்மை அரங்கில் நேற்று முன்தினம் (29.11.25) நடைபெற்றது.

முதல் நூலை திரு. சௌமா ராஜரத்தினம் வெளியிட நூலாசிரியரின் தந்தை திரு. முகம்மது சுல்தானும் 2 வது நூலை கவிஞர் தங்கம் மூர்த்தி வெளியிட நூலாசிரியரின் திருமதி .பல்கிஸ ூம் பெற்றுக் கொண்டனர்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு



**மதுரை,டிச.01:**
தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மதுரை மாவட்டமும், மதுரை வடக்குமாசி வீதி மணியம்மை மழலையர்&தொடக்கப் பள்ளியும் இணைந்து நடத்தும் திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு நடந்தது.மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் உதவிப் பேராசிரியர் முதுமுனைவர் அ.இராமர் அவர்கள் திருக்குறளின் சிறப்புகளைச் சொல்லி மாணவர்களை திருக்குறள் சொல்ல வைத்து பயிற்சி அளித்தார்.உடன் பள்ளியின் ஆசிரியர் மகாலெட்சுமி, தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி ,கவிஞர் குறளடியான்.

## ஒசூர் பாவலர் கருமலைத்தமிழாழனின் கவிதை நூல் வெளியீடு




**சென்னை, டிச.01:**
சென்னை கௌரா பதிப்பகம் தன்னுடைய 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்திய கவிதைப் போட்டியில் பாவலர் கருமலைத்தமிழாழன் எழுதிய “அப்பா எனும் அமுதச் சொல்” கவிதை பரிசு பெற்றது. அந்தக் கவிதை நூலாக வெளியிடப்பட்டது.

கௌரா பதிப்பக உரிமை யாளர் இராசசேகர் ஏற்பாட்டில் சென்னை தியாகராயர் நகர் சர்.பிட்டி.தியாகராயர் அரங்கத்தில் 29-11-2025 சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் தி.மு.கழகத் துணைப்பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா பரிசு பெற்ற பாவலர் கருமலைத்தமிழாழனின் “அப்பா எனும் அமுதச் சொல்” நூலை வெளியிட்டுப் பரிசுத் தொகை வழங்கி வாழ்த்திப்பேசினார்.

## செய்யாறு பழனியப்பா நகர் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் வழிபாட்டு மன்றத்தில் அருள்திரு சக்தி கோ.ப .செந்தில்குமார் வழிபாடு





செய்யாறு பழனியப்பா நகர் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் ஆன்மீக இயக்கத்தின் துணைத் தலைவர் அருள்திரு சக்தி கோ.ப. செந்தில்குமார் சிறப்பு ஆராதனை வழிபாடு நடத்தினார்.

**செய்யாறு டிச.01:**
செய்யாறு பழனியப்பா நகர் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் வழிபாட்டு மண்றத்திற்கு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத்தின் துணைத் தலைவர் நேற்று வருகை தந்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு பழனி யப்பா நகரில் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் வழிபாட்டு மன்றம் இயங்கி வருகிறது.

மன்ற உறுப்பினரின் குடும்ப திருமண நிகழ்வில் பங்கேற்று திடீரென்று பழனியப்பா நகருக்கு வருகை தந்தார்.

மன்றத் தலைவர் டி. சுரேஷ் துணைத் தலைவர் எஸ். கவிதா, செயலாளர் ஜி. ருத்ரமூர்த்தி, உள்ளிட்ட செவ்வாடை தொண்டர்கள் அடிகளாரை வரவேற்று கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். மன்றத்தின் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் கோயில் கருவறையில் உள்ள அருள்மிகு மேல்மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத்தின் துணை தலைவர் அருட்திரு சக்தி கோ.ப. செந்தில்குமார் சிறப்பு ஆராதனை வழிபாடு செய்தார். பின்னர் செவ்வாடை தொண்டர்களுக்கு ஆசீர் வழங்கினார். பின்னர் நிர்வாகிகளிடம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும் .அதற்காக மேலும் நீங்கள் தொண்டாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறை சார்பில் கலைத் திருவிழா




**திருவண்ணாமலை, டிச.01:**
திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அண்ணாமலையார் திருக்கோயிலில் கலையரங்கத்தில் பள்ளி கல்வித்துறை சார்பாக நடைபெற்ற கலை திருவிழாவில் அரசு பள்ளிகளை சார்ந்த 25க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பாரதம், தெருக்கூத்து, நடனம், நாட்டுப்புற பாடல் , காவடியாட்டம் என்று பல்வேறு கலைகளை அரங்கேற்றம் செய்தார்கள். இவ்விழாவில் ஷோபாதேவி வட்டார வளமைய பயிற்றுநர் ஒருங்கிணைத்து நடத்தினார்கள்.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் பிரசன்னா அவர்கள் தொகுப்புரை வழங்கினார்.

விழாவில் தலைமை ஆசிரியை தமிழரசி, கருணாகரன் ஆசிரியர்கள் சுமித்ரா தேவி, ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரும் நாட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கண்டு களித்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

### தென்காசி அருகே

## பைக் - லாரி மோதி விபத்து: 3 பேர் பலி



**சுரண்டை, டிச.01:**
தென்காசி மாவட்டம் சுரண்டை சிவகுருநாத புரத்தை சேர்ந்தவர் அருள் செல்வபிரபு (வயது 50). இவர் சுரண்டை பகுதியில் மெட்டல் பாலீஷ் கடை நடத்தி வந்தார். இவரது மனைவி உஷா (40). இவர் நர்சிங் முடித்து விட்டு மெடிக்கல் வைத்து நடத்தி வந்தார்.

மேலும் சுரண்டை நகராட்சியில் காங்கிரஸ் கவுன்சிலராகவும் இருந்து வந்தார். இவர்களுக்கு 2 மகன்கள், ஒரு மகள் உள்ளனர்.

இந்நிலையில் சுரண்டையில் இருந்து சங்கரன்கோவில் செல்லும் சாலையில் ரெட்டைகுளம் பகுதியில் இவர்களுக்கு சொந்தமான தோட்டம் உள்ளது. தோட்டத்தில் தற்போது பூ பயிரிடப்பட்டுள்ள நிலையில் இன்று அதிகாலை அருள் செல்வபிரபு தனது மனைவி மற்றும் மனைவியின் தங்கையான அதே பகுதியை சேர்ந்த பிளஸ்சி (35) ஆகியோரை அழைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

அங்கு பூப்பறித்து விட்டு 3 பேரும் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர். ரெட்டைகுளம் விலக்கு பகுதியில் வந்தபோது பின்னால் வந்த காய்கறி லாரியின் முன்பக்க பகுதி மோட்டார் சைக்கிள் மீது உரசியது. இதில் மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறியதில் 3 பேரும் சாலையில் விழுந்தனர். அப்போது மோதிய லாரியின் பின்பக்க டயர் 3 பேர் மீதும் ஏறி இறங்கியது. இதில் சம்பவ இடத்திலேயே அருள் செல்வபிரபு, உஷா, பிளஸ்சி ஆகிய 3 பேரும் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சுரண்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று 3 பேர் உடலையும் மீட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து லாரி டிரைவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக 3 பேரும் விபத்தில் பலியான செய்தியை கேட்டு அவர்களது உறவினர்கள் அங்கு சென்று உடல்களை பார்த்து கதறி அழுதது காண்போரை கண்கலங்க செய்தது.

## ஸ்ரீசம்மந்த விநாயகர் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, டிச.01:**
திருவண்ணாமலைஅண்ணாமலையார் ஆலயத்தில் கிழக்கு கோபுர வாயில் வழியாக நுழைந்தவுடன் வலது புறம் ஸ்ரீ சம்மந்த விநாயகர் இருப்பதால் ஆலயத்திற்குள் செல்லும் பக்தர்கள் முதல் தரிசனமாக சம்மந்த விநாயகரை வணங்கி வேண்டி செல்வது வழக்கம் ஸ்ரீ சம்மந்த விநாயகர் அபிஷேகம், அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எஸ்.ஐ.ஆர். விவகாரம்: தி.மு.க.-விற்கு கிடைத்த வெற்றி என்.ஆர்.இளங்கோ எம்.பி



**சென்னை, டிச.01:**
எஸ்ஐஆர் படிவங்களுக்கான காலக்கெடு நீட்டிப்பு திமுகவிற்கு கிடைத்த வெற்றி என திமுக எம்.பி. என்.ஆர்.இளங்கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

எஸ்ஐஆர் பணிகள் இன்னும் சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கிறது, அவை தீர்க்கப்படவில்லை.

இந்தியாவில் வாக்காளர் களை பாதுகாக்க பணியாற்றும் ஒரே சட்சி திமுக தான்.

எந்த ஒரு விஷயத்தையும் தேர்தல் ஆணையம் வெளிப்படையாக தெரிவிப் பதில்லை.

எஸ்ஐஆர் விவகாரத்தில் அரசியல் காரணங்களுக்காக திமுக மீது அதிமுக குற்றம்சாட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை..!





### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, டிச.01:**
ஆளுநர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று மத்திய அரசு ஒப்புதல்.

சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே!

மாநிலங்களில் உள்ள ராஜ் பவன்கள் இனி லோக் பவன் என்று அழைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2024 ஆளுநர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை!

சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், "மக்கள் மாளிகை" எனப் பெயர் மாற்றுவது கண் துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கா?

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்டமன்றத்தையும் மதிப்பது தான் இப்போதைய தேவை!

சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## டிட்வா புயல் - மாமல்லபுரம் கடற்கரையில் தவித்த 120 இருளர் குடும்பத்தினர் மண்டபத்தில் தங்கவைப்பு



**மாமல்லபுரம், டிச.01:**
வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள "டிட்வா" புயலின் தாக்கத்தால் நேற்று மாலை மாமல்லபுரத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து இரவு முழுவதும் காற்றுடன் மழை பெய்தது. இன்றும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மீனவர்கள் தங்களது படகுகள், மிஷின், வலைகளை பாதுகாப்பான இடங்களில் வைத்துள்ளனர்.

கடலின் சீற்றம் அதிகமாக காணப்படுவதால் மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் தென்பகுதி, பட்டிப்புலம் பகுதிகளில் கடற்கரை கரையோரம் குடில் அமைத்து தங்கியிருந்த இருளர் 120 குடும்பங்கள் பாதுகாப்பு இன்றி இருப்பதாக தகவலறிந்த, மாவட்ட கலெக்டர் சினேகா அவர்களை பாதுகாக்க உத்தரவிட்டார்.

சப்-கலெக்டர் மாலதி ஹலென் தலைமையில் திருப்போரூர் தாசில்தார் சரவணன், திருக்கழுக்குன்றம் தாசில்தார் வாசுதேவன் உள்ளிட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அவர்களை அங்கிருந்து, அப்புறப்படுத்தி கோவளம் சாலையில் உள்ள முத்தமிழ் மண்டபத்தில் பாதுகாப்பாக தங்க வைத்துள்ளனர். அவர்களுக்கு மாமல்லபுரம் நகராட்சி ஆணையர், தலைவர் வளர்மதி எஸ்வந்தராவ், துணைத்தலைவர் ராகவன் உள்ளிட்டோர் உணவுகள் வழங்கினர்.

மாமல்லபுரத்தில் ஞாயிறு, விடுமுறை நாட்களில் கூட்டம் அதிகளவில் காணப்படும். டிட்வா புயல் காரணமாக தொடர் மழை பெய்து வருவதால் மாமல்லபுரம் புராதன சின்னங்கள் பகுதிகளான கடற்கரை கோவில், அர்ச்சுனன் தபசு, ஐந்துரதம் பகுதிகள் வெறிச்சோடி காணப்பட்டது.

மாமல்லபுரம் வந்த சுற்றுலா பயணிகள் ஓட்டல், ரிசார்ட், விடுதிகள் முடங்கினர். கடற்கரை சாலையோர கடைகள் மற்றும் அரசு கைவினை பொருட்கள் கடை இருக்கும் ஐந்துரதம் வளாகங்களில் உள்ள கடைகளும் வெறிச்சோடி காணப்பட்டது.

# திருச்சியில் ரூ.3 கோடி மதிப்பிலான உயர்ரக கஞ்சா பறிமுதல்




**திருச்சி, டிச.1:** சிங்கப்பூரில் இருந்து நேற்று ஸ்கூட் விமானம் திருச்சி விமான நிலையத்துக்கு வந்தது. இந்த விமானத்தில் தாய்லாந்தில் இருந்து சிங்கப்பூர் வழியாக திருச்சி வந்த பயணி ஒருவரின் உடைமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது, அதில் 3 கிலோ ஹைட்ரோபோனிக் என்ற உயர்ரக கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அதிகாரிகள் அதனை பறிமுதல் செய்தனர். மேலும் அதனை கடத்தி வந்த பயணியை பிடித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட உயர்ரக கஞ்சாவின் மதிப்பு இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.3 கோடி ஆகும்.

# கிண்டியில் கார் மீது பெட்ரோல் குண்டு வீசிய வாலிபர் கைது

**சென்னை, டிச.1:** சென்னை கிண்டி ஈஸ்வரி ரத்தினம் கார்டன் பகுதியை சேர்ந்தவர் ராம் நித்திஷ் (வயது 26). தனியார் கட்டுமான நிறுவனத்தில் என்ஜினீயராக பணி புரியும் இவரது கார் நேற்று அதிகாலை, திடீரென தீப்பிடித்து எரிந்தது. அதிர்ச்சி அடைந்த ராம் நித்திஷ், அக்கம் பக்கத்தினர் உதவியுடன் காரில் எரிந்த தீயை தண்ணீரை ஊற்றி அணைத்தார். எனினும் காரின் முன்பகுதி சேதமடைந்தது.

இதுகுறித்து அவர் கிண்டி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் நடத்திய விசாரணையில் கிண்டி, மடுவாங்கரையை சேர்ந்த விஜய பிரபாகரன்(25) என்பவர் பீர் பாட்டிலில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து அதனை ராம் நித்திஷ் கார் மீது வீசியது தெரிந்தது. இதையடுத்து பிரபாகரனை போலீசார் கைது செய்தனர்.

மது போதைக்கு அடிமையான பிரபாகரன், 2 முறை போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்றுள்ளார். இதனால் அவர் மனநலம் பாதித்ததாக கூறப்படுகிறது. எதற்காக ராம் நித்திஷ் காரில் பெட்ரோல் குண்டு வீசினார்? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# பயிர் காப்பீடு செய்யாத விவசாயிகள் நாளைக்குள் பதிவு செய்ய வேண்டும்

## தமிழக அரசு தகவல்




**சென்னை, டிச.1:** தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தேசிய பயிர் காப்பீட்டு வலைதளத்தில், சம்பா நெற்பயிர் காப்பீடு செய்ய செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் 15-ந்தேதி வரை காலநிர்ணயம் செய்யப்பட்டு பதிவு நடைபெற்று வந்தது. தொடர்ந்து 30-ந்தேதி வரை மத்திய அரசால் கால நீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது வரை 31.33 லட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 7.95 லட்சம் விவசாயிகளால் 19.06 லட்சம் ஏக்கர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த சாகுபடி பரப்பில் 61 சதவீதமாகும். இது கடந்த ஆண்டைவிட 1 லட்சம் ஏக்கர் கூடுதலாகும். மேலும், இந்த நீட்டிக்கப்பட்ட காலத்தில் 66 ஆயிரம் விவசாயிகளால் 1.63 லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, 30-ந்தேதி வரை காப்பீடு செய்ய கால நிர்ணயம் செய்யப்பட்ட பயிர்களை இதுவரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் டிசம்பர் 1-ந்தேதிக்குள் (நாளை) பதிவு செய்து கொள்ளலாம். நில உரிமையுள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக இ-சேவை மையத்தில் விவசாயி பதிவுமூலம் வழங்கப்படும் விவசாயிகள் அடையாள எண்ணைபெற்றுக்கொள்ளலாம்.

மேலும், பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில், 2024-2025-ம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.794 கோடி ஒப்பளிக்கப்பட்டு இதுவரை, 4 லட்சம் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் ரூ.697 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இழப்பீட்டுத்தொகை மத்திய அரசின் பங்குதொகையான ரூ.67 கோடி பெறப்பட்டவுடன் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் தேரோட்டம்.. திரளான பக்தர்கள் பங்கேற்பு



**திருவண்ணாமலை, டிச.1:** திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத்திருவிழா தொடங்கி நடந்து வருகிறது. இதையொட்டி தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் வீதி உலாவும், இரவில் பஞ்சமூர்த்திகள் வீதிஉலாவும் நடக்கிறது.

விழாவின் 5-வது நாளான நேற்று முன்தினம் இரவில் பஞ்சமூர்த்திகளான வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகரும், வெள்ளி மயில் வாகனத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகரும், வெள்ளி பெரிய ரிஷப வாகனத்தில் உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரரும், வெள்ளி ரிஷப வாகனங்களில் பராசக்தி அம்மன் மற்றும் சண்டிகேஸ்வரரும் சிறப்பு அலங்காரத்தில் கோவிலின் ராஜகோபுரம் எதிரில் உள்ள 16 கால் மண்பத்தில் எழுந்தருளினர்.

பின்னர் அங்கு சாமிக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டு தீபாராதனை நடந்தது. நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி அளவில் சாமி வீதிஉலா தொடங்கியது. பின்னர் பஞ்சமூர்த்திகள் மாட வீதிகளில் மங்கள வாத்தியங்கள் முழங்க வலம் வந்தனர். கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் இரவில் சாமி தரிசனம் செய்தனர்.

கார்த்திகை தீபத் திருவிழாவின் 6-ம் நாள் விழாவான நேற்று காலை 11.30 மணி அளவில் சிறப்பு அலங்காரத்தில் விநாயகர் மர யானை வாகனத்திலும், அம்பாளுடன் சந்திரசேகரர் வெள்ளி யானை வாகனத்திலும் கோவில் ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் எழுந்தருளினர். அங்கு சாமிக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

அப்போது 63 நாயன்மார்கள் வீதிஉலாவும் நடைபெற்றது. நாயன்மார்களை சுமந்து செல்வதற்காக பள்ளி மாணவர்கள் காலையிலேயே கோவிலுக்கு வந்திருந்தனர். மாணவர்கள் 63 நாயன்மார்களை தங்கள் தோள்களில் சுமந்து மாடவீதிகளில் செல்ல, அவர்களை தொடர்ந்து திருநாவுக்கரசர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் வந்தனர். பின்னர் விநாயகரும், சந்திரசேகரரும் மாடவீதியில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். மாடவீதிகளில் பக்தர்கள் தங்களின் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

தொடர்ந்து இரவு 10 மணி அளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் வெள்ளி தேர், வெள்ளி இந்திர விமானம், வெள்ளி விமானங்களில் கோவில் மாடவீதியை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

வெள்ளி தேரையொட்டி திருவண்ணாமலை நகரத்திற்கு ஏராளமான பக்தர்கள் வருகை புரிந்ததால் நூற்றுக்கணக்கான போலீசார் திருவண்ணாமலை நகரம் மற்றும் மாடவீதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கார்த்திகை தீபத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தேரோட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி கோலாகலமாக நடைபெற்று வருகிறது. காலையில் விநாயகர் தேர் வடம் பிடித்து இழுக்கும் நிகழ்ச்சி தொடங்கியது. முதலில் விநாயகர் தேரும், அதைத்தொடர்ந்து முருகர் தேரும் வீதிஉலா சென்றது. 2 தேர்களும் நிலைக்கு வந்ததும் பெரியதேரான அருணாசலேஸ்வரரின் மகா ரதம் இழுக்கப்பட்டது. இதில் ஆண்கள் ஒருபக்கமும், பெண்கள் ஒருபக்கமும் வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

பெரியதேர் நிலைக்கு வந்ததும் இரவில் அம்மன் தேரோட்டம் நடைபெறுகிறது. அம்மன் தேரை பெண்கள் மட்டுமே இழுப்பார்கள். இந்த தேரின் பின்னால் சண்டிகேஸ்வரர் தேர் இழுக்கப்படும். சண்டிகேஸ்வரர் தேரை சிறுவர், சிறுமிகள் இழுப்பார்கள். காலை முதல் இரவு வரை தேரோட்டம் நடைபெறும்.

தேரோட்டத்தையொட்டி இன்று திருவண்ணாமலையில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் விழாவின் சிகர நிகழ்ச்சியான 3-ந்தேதி (புதன்கிழமை) அதிகாலையில் கோவிலில் பரணி தீபமும், மாலையில் கோவில் பின்புறம் உள்ள மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது.

# 'சூடு, சொரணை இருந்தால்'.. செங்கோட்டையனை கண்டித்து அதிமுகவினர் ஒட்டிய போஸ்டரால் பரபரப்பு




**மானாமதுரை, டிச.1:** அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்கடந்த 27-ம் தேதி நடிகர் விஜய்யை நேரில் சந்தித்து த.வெ.க.வில் இணைந்தார். அவருக்கு த.வெ.க.வில் மாநில நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் மற்றும் கொங்கு மண்டல அமைப்பு செயலாளர் பதவிகள் கொடுக்கப்பட்டன.

இந்த நிலையில் கோபியில் உள்ள செங்கோட்டையன் அலுவலகத்தில் அவர் வைத்திருந்த பழைய பெயர் பலகை அகற்றப்பட்டு புதியபெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. அதில் அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, விஜய் உருவப்படங்களுடன் செங்கோட்டையன் உருவப்படமும் இடம் பெற்றுள்ளது. அதில் தவெக கொள்கை தலைவர்கள் புகைப்படமு, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், தவெகவில் இணைந்தசெங்கோட்டையனை கண்டித்து மானாமதுரையில் அதிமுகவினர் போஸ்டர் ஒட்டியுள்ளனர். அதில், "செங்கோட்டையனே அடையாளம் தந்த அதிமுகவே வேண்டாம் என்று போன பிறகு 'எம்.ஜி.ஆர். ஜெயலலிதா' படம் மட்டும் எதற்கு சூடு, சொரணை இருந்தால் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா படங்களை பயன்படுத்தாதே...." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த போஸ்டரால் மானாமதுரையில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## கூட்ட நெரிசல் சம்பவம்:

# சிபிஐ விசாரணையை கண்காணிக்க சுப்ரீம் கோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி நாளை கரூர் வருகை




**கரூர், டிச.1:** கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி நடைபெற்ற த.வெ.க. பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். இதுதொடர்பான வழக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கியிருந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் ஏற்கனவே பலியான 12 பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

மேலும் இந்த விசாரணையை கண்காணிப்பதற்காக ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழுவையும் சுப்ரீம் கோர்ட்டு அமைத்தது. இந்த குழுவில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் சுமித் சரண், சோனல் வி.மிஸ்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான சிறப்புக்குழு கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான விசாரணையை கண்காணிக்க நாளை (திங்கட்கிழமை) கரூருக்கு வருகை தர உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இந்த வழக்கின் விசாரணையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்கிறார்கள். ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகியின் வருகையால் இந்த வழக்கு விசாரணை பரபரப்பான கட்டத்தை அடைந்துள்ளது.



## தினம் ஒரு குறள்

**நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறர்க்குரியாள் தோள்தோயா தார்.** - குறள் 149

జలధి పరివృతమగు జగమందు విఖ్యాతి
పరసతి భుజ బంధ మరయరాయి - కురల్ 149

सागर-बलयित भूमि पर, कौन भोग्य के योग्य ।
आलिंगन पर- नारि को, जो न करे वह योग्य ॥ - कुराल 149

Nalakkuriyaar Yaarenin Naamaneer Vaippin
Pirarkkuriyaal Tholdhoyaa Thaar - Kural 149

## காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த பெற்றோர்..

# மாணவியின் கழுத்தை அறுத்துவிட்டு வாலிபர் எடுத்த விபரீத முடிவு

**கரூர், டிச.1:** கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியை அடுத்த வேலம்பாடி கிராமத்தை சேர்ந்தவர் வசந்தகுமார் (வயது 26), எலக்ட்ரீசியன். இவர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படித்து வரும் 16 வயது சிறுமியை கடந்த 3 ஆண்டுகளாக காதலித்து வந்தார். இவர்களது காதல் விவகாரம் சிறுமியின் பெற்றோருக்கு தெரியவந்தது. இதையடுத்து, அந்த சிறுமியை அவரது பெற்றோர் கண்டித்தனர்.

இந்த நிலையில், நேற்று காலை 10 மணியளவில் சிறுமியின் பெற்றோர் வேலைக்கு சென்றதை அறிந்த வசந்தகுமார் சிறுமியின் வீட்டுக்கு சென்றார். பின்னர் அவர்கள் இருவரும் சிறிது நேரம் மனம்விட்டு பேசினர்.


அப்போது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவிப்பதால் இருவரும் தற்கொலை செய்து கொள்வது என்று கனத்த இதயத்துடன் முடிவு செய்தனர். அதன்படி வசந்தகுமார் சிறுமியின் கழுத்தை பிளேடால் அறுத்துள்ளார். இதில் ரத்தம் பீய்ச்சியடித்து சிறுமி மயங்கி கீழே சரிந்தார்.

இதில் அவர் இறந்து விட்டதாக நினைத்த வசந்தகுமார் சிறுமியின் வீட்டிலேயே தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதற்கிடையே மயக்கம் தெளிந்து கண் விழித்த சிறுமி வசந்தகுமார் தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர் அவர் வீட்டில் இருந்து வெளியே வந்து அப்பகுதி மக்களிடம் தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து அவர்கள் சிறுமியை மீட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு

# கொடைக்கானலில் 2-வது நாளாக சுற்றுலா இடங்கள் மூடல்



**கொடைக்கானல், டிச.1:** திண்டுக்கல், தேனி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானலில் கடும் குளிருடன் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் நேற்று வனப்பகுதியில் உள்ள சுற்றுலா தலங்களான தூண்பாறை, மோயர்பாய்ண்ட், குணாகுகை, பைன்பாரஸ்ட், பேரிஜம் ஏரி உள்ளிட்ட இடங்கள் மூடப்பட்டன. இன்று ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை என்ற போதும் சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவாகவே இருந்தது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் பாதுகாப்பு கருதி இன்று 2-வது நாளாக சுற்றுலா தலங்கள் மூடப்படுவதாக வனத்துறையினர் அறிவித்தனர்.

மேலும் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் நட்சத்திர ஏரியில் படகு சவாரி நிறுத்தப்பட்டது.

மற்ற சுற்றுலா தலங்களான பிரையண்ட் பூங்கா, ரோஜா பூங்கா, கோக்கர்ஸ் வாக் உள்ளிட்ட பகுதிகளிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் குறைவாகவே இருந்தது.


பொதுமக்களும் வெளியே நடமாடுவதை தவிர்த்ததால் சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டது. இதேபோல் தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணை, கும்பக்கரை அருவி, சுருளி அருவி ஆகியவற்றிலும் சுற்றுலாப் பயணிகள் செல்லாததால் வெறிச்சோடி காணப்பட்டது.

ஆண்டிபட்டி பகுதியில் பெய்த கனமழையால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதில் சக்கம்பட்டியை சேர்ந்த மணி (வயது60) என்பவர் நடந்து சென்றபோது தவறி கால்வாயில் விழுந்து பலியானார். இன்று காலை அவ்வழியாக சென்றவர்கள் அதை பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் விரைந்து சென்று முதியவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

பெரியகுளம் அருகே உள்ள கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ளது. இதனால் இன்று காலை சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறையினர் தடை விதித்தனர். இதே போல் வருசநாடு மலைப்பகுதியில் அமைந்துள்ள மேகமலை அருவியிலும் வெள்ளப்பெருக்கு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக தடை விதிக்கப்பட்டுள்ளது. கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் நீர்வரத்து சீராக உள்ளதால் அனுமதிக்கப்பட்ட போதும் குறைந்த அளவே சுற்றுலாப் பயணிகள் வந்தனர்.

# கவிதை அரங்கம்!






கனவுகள் தான் நாம்
வெற்றிக்கான எரிபொருள்
எனவே வெற்றியை நோக்கி
ஓடாமல் கனவை நோக்கி
ஓடு தானாகவே வெற்றி
கிடைக்கும்.

உறுதியான தேடல்
இருந்தால் தேனும்
தேடாமல் கிடைக்கும்..
உழைப்பும் உறுதியும்
இருந்தால் உயர்வும்
உண்மையாக கிடைக்கும்..
விடா முயற்யை விடாமல்
இருந்தால் விட்டதும்
உனக்கே கிடைக்கும்..
தன்னம்பிக்கையும்
முயற்சியும் இணைந்தால்
தோல்வியும் உன்னிடம்
தோற்கும்.. வெற்றி
உனக்கே கிடைக்கும்..

காலம் இலையுதிர் காலம்
இனி வரும் காலம்
வருங்காலம்! காலில்
விழுந்தால் கடவுள்
கருணை நம் வரமாகும்!
காலில்லாமல் வீழ்ந்தால்
கடவுள் மூச்சு நம்
பேச்சாகும் !

உண்மையான வெற்றி
பல சவால்கள் மற்றும்
தடைகளை தாண்டி தான்
வரும்.

## வாழ்க்கை தத்துவம்




ஆயிரம் தடவை உன் சந்தேகத்தை நேரே கேள் அது சிறிய கோபத்தை உருவாக்கும் ஆனால் பதில் கிடைத்து விடும், ஆனால் உன் சந்தேகத்தை நேரே கேட்க்காமல் உன்னுள் வைத்து மறை முகமாய் ஒருவனைக் காயப் படுத்தாதே அது உனக்கு எல்லையற்ற துன்பத்தை தந்துவிடும்...

இழப்பு அல்லது பிரிவின்றி எவரும் ஒன்றின் அருமையை உணருவதில்லை.

நான் என்று சொல்லும் போது எனது அகத்தில் இருப்பதையே கூறுகிறோம், எனது என்று சொல்லும் போது எனக்காக புறத்தில் இருப்பதை கூறுகிறோம். இதை எல்லாம் தாண்டி நாம் என்று கூறும் பொழுதே வெளியில் எமக்காக காத்திருக்கும் வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கிறோம்.

மனிதனாய் பிறந்து மிருகத்தின் குணத்தைக் கொண்டிருப்பதை விட. மிருகமாய் பிறந்து அது தன் இனத்தின் மீது காட்டும் அன்பு போல் காட்டி வாழ்ந்து விடு மனிதா!

# ஐயா....!



நாவ மரத்துக் கழனி ஞாபகம் வரும்போதெல்லாம், பிச்சாண்டி அங்கமுத்துவ அழைச்சுகிட்டு ஆரம்ப கால வரலாறிலிருந்து இன்னைக்கு இருக்கிற சமூகத்தோட நிலையப் பத்தி பேசிகிட்டே போவான்.

இன்னைக்கு என்னோட வாழ்வுக்கும் மகிழ்ச்சிக்கும் ஐயாதான் காரணம். ஐயா எனக்கு எதற்காக இந்த வாய்ப்ப கொடுத்தாரு ? அதுக்குப் பின்னாடி பெரிய வரலாறே இருக்கு. என் பாட்டன்மார்கள் நெறைய பாடு எடுத்திருக்காங்க. அத உணர்ந்தவரு எங்க ஐயா..." என்னு பேசிகிட்டே நடந்தான்.

கையில் உள்ள பச்ச மல்லாட்டைய உரிச்சு வாயில்போட்டு, மென்னுகிட்டே "ஐயாவ ஏன் நாங்க கொண்டாடுறோம் தெரியுமா ?" ன்னு அங்கமுத்துவைப் பார்த்துக் கேட்டான் பிச்சாண்டி.

"அப்படி என்ன செஞ்சுட்டாரு உங்களுக்கு?" இயல்பாய் கேட்டான் அங்கமுத்து.

" காந்திய சிந்தனையாளர், சமூக சீர்திருத்தவாதி, ஆன்மீக பற்றுடையவர், எளிமையாய் வாழ்ந்த அற்புதமான மனிதர். இப்படி அவரபத்தி சொல்லிக்கிட்டே போகலாம்" என்றான் பிச்சாண்டி.

"சார் வணக்கம். என்ன இந்தப் பக்கம்." மாட்டை ஓட்டிச்சென்று மண்ணாங்கட்டி பிச்சாண்டியை விசாரிக்க, "உங்க எல்லாரையும் பார்த்து ரொம்ப நாளாச்சு. அதான் பாத்துட்டு போலாம்னு வந்தேன். சரி குழந்தை என்ன படிக்கிறா ?"ன்னு அக்கறையோடு விசாரிக்கும்போது, "உங்க முயற்சியில காலேஜ் படிக்கிறா" ன்னு பதில் சொல்லிக்கொண்டே மாட்டை ஓட்டினான் மண்ணாங்கட்டி.

"நான் இல்ல, எல்லாத்துக்கும் காரணம் ஐயாதான். ஐயாவ மறக்காத" ன்னு சத்தமா சொன்னான்.

சற்று நேரத்தில் எதிர் திசையில் ராமலிங்கம் அண்ணன் தென்படவே, மரியாதையோடு "அண்ணா எப்படி இருக்கீங்க?" என்று கேட்டான் பிச்சாண்டி.

"நான் நல்லா இருக்கேன்பா, நீ நல்லா இருக்கியா? பசங்க என்ன படிக்கிறாங்க." என நலம் விசாரித்து, சோகமான முகத்தோடு "வீடுப்பா, எல்லா அய்யாவோடு போயிடுச்சு. சரி வரம்பா" என வேகமாக மிதிவண்டிய மிதித்துச் சென்றார் ராமலிங்கம்.

"இவர் யார் தெரியுமா.? ஐயாவோட கணக்கு வழக்கு எல்லாத்தையும் பார்த்தவர்" என சொல்ல, "என் கூட உட்கார்ந்து ரேஷன் கட பச்சேரி சோத்த சாப்பிடுவாரு, வயல்வெளியில வரப்பு மேட்டுல, உழைக்கும் மக்களோடு மக்களாகக் கால் வலிக்கக் கொளுத்தும் வெய்யில்ல நின்னுகிட்டு இருப்பாரு. அரசாங்கம் டவுன் பஸ்லதான் பயணிப்பாரு, எல்லாருக்கும் மரியாதை கொடுப்பாரு."

இருவரும் மௌனமாகக் கொஞ்சம் நேரம் நின்றிருந்தனர்.

எனக்குத் தெரிஞ்சவர அவர பத்தி மக்கள் மத்தியில இருந்த மதிப்பீடு உயர்வாதான் இருந்தது.

ஒருமுறை கோயில் திருவிழா. சாமி ஊர்வலம். ஊர் மக்களோடு உதவி அவ்வளவா இல்லை. எதைப் பற்றியும் கவலைப்படாம என்ன கூப்பிட்டு "இங்க வாங்க... அவருக்குச் சக்தி உண்டு. அவருக்கு உண்டானது அவர் நிச்சயம் செய்துக்குவாரு. நடக்குர வேலையப் பாருங்க. நான் காலையில வரன்னு, என்னிடம் கோவில் சாவிய கொடுத்துட்டு போயிட்டாரு."

எந்தக் குறையும் இல்லாம சாமிய கோயில சுத்தி எடுத்து வந்து, சிறப்பா செய்து முடிச்சோம். அவர பத்தி பெருமையா பேசுறவங்க அவரால கல்வியும், வாழ்வாதரமும் பெற்றவங்க... அவருக்கு அதிகம் பேசறது பிடிக்காது. சொல்லு போல செலவையும் சீக்கனமா செய்வார். யாருக்கு என்ன செய்யணும், எப்ப செய்யணுமுன்னு அவருக்கு நல்லா தெரியும்"

கொஞ்சம் மௌனம்.

"அவர நான் ஏன் கொண்டாடுரன்'ன்னு உணக்கு தெரியனுமில்ல."

"சொல்லுங்க" என்றான் அங்கமுத்து...

"கோயில் திருவிழாவோட முதல் நாள். 2,50,000 ரூபா நோட்டுக் கட்ட என் கையில கொடுத்து, சார் இது வெறும் பணம் இல்ல, நான் உங்களுக்கு வழங்குற அதிகாரம்' ன்னு சொல்லிக் கொடுத்தார்.

எனக்குப் பயமா இருந்தது.

எனக்குப் பக்கத்துல நின்னுகிட்டிருந்த ராமலிங்கம் முகம் இருக்கமா இருந்தது.

"இதுதான் நான் அவரக் கொண்டாடக் காரணம்"

"எனக்கு வாய்ப்பு மட்டும் கொடுக்கல, நான் வாழற சமூகத்துல என்னப் பத்திய மதிப்ப உயர்த்தி கொடுத்த நல்ல மனிதர். இந்தச் சமூகத்தையே என் பக்கம் திரும்பிப் பார்க்க வச்சவர், ஐயா"ன்னு சொல்லி முடித்தபோது, பிச்சாண்டியின் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தது.

**இரா.இரமேஷ்**
கயப்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன் : வொய்ஃபுக்கு(WIFE) அர்த்தம் தெரியுமா? வித்அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் ( WITHOUT INFORMATION FIGHTING EVERTHING)*

*மனைவி : அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க ! வித் இடியட் ஃபார் எவர் ( WITH IDIOT FOR EVER)*

*கணவன் : தேவைதான்டி எனக்கு !*



# தினம் ஒரு சமையல்



## ஒன் பட் தக்காளி சாதம்

**தேவையான பொருட்கள்:**

எண்ணெய் -2 டேபிள் ஸ்பூன்
கிராம்பு -2
பட்டை -2 துண்டு
பிரியாணி இலை -ஒன்று
சோம்பு -ஒரு டீஸ்பூன்
வெங்காயம் -2
தக்காளி -3
இஞ்சி பூண்டு பேஸ்ட் -1/2 டேபிள்ஸ்பூன்
உப்பு -தேவையான அளவு
மிளகாய் தூள் -ஒரு டீஸ்பூன்
மல்லித்தூள் -2 டீஸ்பூன்
புதினா மற்றும் கொத்தமல்லி -ஒரு கைப்பிடி அளவு
தயிர் -2 டேபிள் ஸ்பூன்
அரிசி -2 கப்
தண்ணீர் -4 கப்
நெய் -ஒரு டேபிள் ஸ்பூன்



**செய்முறை:**

ஒரு குக்கரை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் முதலில் எண்ணையை ஊற்ற வேண்டும். பிறகு அதில் பட்டை, கிராம்பு, சோம்பு, பிரியாணி இலை போன்றவற்றை சேர்க்க வேண்டும். அடுத்ததாக நீளவாக்கில் நறுக்கி வைத்திருக்கும் வெங்காயம் மற்றும் தக்காளியை சேர்க்க வேண்டும். பிறகு அதனுடன் மிளகாய் தூள், இஞ்சி பூண்டு பேஸ்ட், மல்லித்தூள் போன்றவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள்.

இதற்கு தேவையான அளவு உப்பையும் சேர்த்து பொடியாக நறுக்கிய புதினா, கொத்தமல்லியும் சேர்த்து, தயிரையும் சேர்த்து கைகளினாலேயே நன்றாக பிணைந்து விட வேண்டும். பிறகு இதில் ஊற வைத்திருக்கும் அரிசியை போட்டு அந்த அரிசிக்கு தேவையான நான்கு கப் அளவு தண்ணீரையும் ஊற்றி ஒரு முறை கரண்டியை வைத்து கலந்து விடுங்கள். கடைசியாக ஒரு டேபிள் ஸ்பூன் நெய்யை போட்டு ஒரு முறை கலந்து குக்கர் மூடியை மூடி அடுப்பை பற்ற வைத்து அடுப்பில் வைத்து விட வேண்டும்.

மூன்று விசில் வந்ததும் அடுப்பில் இருந்து இறக்க வேண்டும். விசில் முற்றிலும் நீங்கிய பிறகு குக்கரை திறந்தால் சுவையான தக்காளி சாதம் தயாராக இருக்கும். நேரத்தை மிச்சப்படுத்தவும் எரிவாயுவை மிச்சப்படுத்தவும் இந்த வகையில் நாம் தக்காளி சாதம் செய்யலாம். சுவைக்கு எந்தவித குறையும் இருக்காது.

## சீமை மாதுளை நன்மைகள்



சீமை மாதுளை (மாதுளை) பழம் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், செரிமானத்தை ஆதரித்தல், புற்றுநோய் எதிர்ப்பு நன்மைகளை வழங்குதல், சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மூளை செயல்பாட்டை அதிகரித்தல் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற பல நன்மைகளைக் கொண்டுள்ளது. இது நார்ச்சத்து, வைட்டமின்கள் (சி, கே, ஏ, பி6), ஃபோலிக் அமிலம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் ஆகியவற்றின் சிறந்த மூலமாகும்.

ஆரோக்கிய நன்மைகள்

இதய ஆரோக்கியம்: இரத்த அழுத்தம் மற்றும் இரத்தக் குழாய்களில் பிளேக் உருவாவதைக் குறைக்க உதவுகிறது. இது இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி இதய ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது.

செரிமானம்: நார்ச்சத்து நிறைந்தது, இது செரிமானத்தை ஊக்குவிக்கிறது, மலச்சிக்கலைத் தடுக்கிறது மற்றும் நன்மை பயக்கும் குடல் பாக்டீரியாக்களின் வளர்ச்சியை ஆதரிக்கிறது.

புற்றுநோய் எதிர்ப்பு: இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் புற்றுநோய் செல்களுக்கு எதிராகப் போராட உதவுகின்றன.

சரும ஆரோக்கியம்: வைட்டமின் சி கொலாஜன் உற்பத்தியை அதிகரித்து, சருமத்தை பிரகாசமாக்க உதவுகிறது. மேலும், காயங்கள் மற்றும் தழும்புகளைக் குணப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மூளை ஆரோக்கியம்: ஞாபகசக்தியை அதிகரிக்கும் மற்றும் அல்சைமர் போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கும். நரம்பியல் கடத்திகளின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

எலும்பு ஆரோக்கியம்: மாதுளையின் தோலில் இருந்து தயாரிக்கப்படும் டீ எலும்புகளை வலுப்படுத்த உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: வைட்டமின் சி உடலின் குணப்படுத்தும் ஆற்றலை விரைவுபடுத்துகிறது, இது நோய்களில் இருந்து மீள உதவுகிறது.

# அஜித்தின் அட்டகாசம் திரைப்படம் ரீ ரிலீஸில் செய்துள்ள வசூல்..



சரண் இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவாகி 2004ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் அட்டகாசம். இப்படத்தில் பூஜா, ரமேஷ் கண்ணா, இளவரசு ஆகியோர் நடித்திருந்தனர்.

இப்படத்திற்கு பரத்வாஜ் இசையமைத்திருந்தார். அஜித்தின் திரை வாழ்க்கையில் இப்படமும் மிக முக்கியமான ஒன்றாகும்.

21 ஆண்டுகள் கழித்து இப்படத்தை ரீ ரிலீஸ் செய்ய திட்டமிட்டு இருந்தனர்.

இந்நிலையில், இன்று இப்படம் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியாகி உள்ளது. தற்போது, இப்படத்தின் வசூல் குறித்து தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, அட்டகாசம் திரைப்படம் ரீ ரிலீஸ் செய்யப்பட்டு ரூ. 50 லட்சம் மேல் வசூல் செய்துள்ளது.

## சினிமா



அனுபமா சேலையில் வலம் வரும் அழகிய ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ,

# அஜித்துக்காக VJ சித்து செய்திருக்கும் விஷயம்! டயங்கரம் போஸ்டரில் அதை கவனித்தீர்களா

பிரபல யூடியூபர் VJ சித்து ஹீரோவாக அறிமுகம் ஆகும் படம் டயங்கரம். அந்த படத்தை அவரே இயக்குகிறார்.

வேல்ஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரித்து வருகிறது. ஷூட்டிங் ஒரு மாதத்திற்கு முன் பூஜையுடன் தொடங்கி நடைபெற்று வந்தது.

இந்நிலையில் முதல் schedule ஷூட்டிங் முடிவுக்கு வந்திருப்பதாக தற்போது போஸ்டர் உடன் அறிவித்து இருக்கின்றனர்.

அந்த போஸ்டரில் பின்னால் இருக்கும் சுவற்றில் 'தல ரசிகர்' என குறிப்பிட்டு அஜித்தை வரைந்து வைத்து இருக்கின்றனர். VJ சித்து அஜித் ரசிகர் என்பதால் அவர் இவ்வாறு செய்து இருப்பதாக தெரிகிறது.




Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**